**D.V.C.No.9/2023**

**P.W.1**

| | | |
|---|---|---|
| திருமதி. அமராவதி | க/பெ.மாசானமுத்து | Date:07.08.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு

**<u>3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.வெற்றிவேல் நாடார் எனது மாமனார். அவர் தற்போது காலமாகிவிட்டார் என்றால் சரிதான். ஜானகியம்மாள் எனது மாமியார். அவருக்கு சுமார் 80 வயது இருக்கும் என்றால் சரியல்ல. 60 முதல் 70 குள் இருக்கும். சுந்தரலிங்கம் எனது கொழுந்தன். அவர் வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் ஒரே ஒரு வருடம்தான் வெளிநாட்டில் வேலை பார்த்தார். அதுவும் இந்த பிரச்சினைக்கு பிறகுதான் வெளிநாடு சென்றார். சுந்தரலிங்கம் மனைவி, குழந்தைகள் வள்ளியூரில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எனது கணவர் 56 நாள் கழித்து வெளிநாடு சென்றார். அதுவரை எனது கணவர் வீட்டில் மாமனார், மாமியாருடன் இருந்தேன் என்றால் சரிதான்.

2. எனது கணவர் வெளிநாடு சென்றவுடன் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. ஜானகியம்மாள் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோர்கள் மீது நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது உண்மையில்லை என்றால் சரியல்ல. ஜானகியம்மாள் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோர் எனக்கு எவ்வித குடும்ப வன்முறை செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் என்னிடம் பேசுவது கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு மேற்படி 3,4 எதிர்மனுதாரர்களுக்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

3. சுந்தரலிங்கம் அவரது பெற்றோர்கள் வீட்டிற்கு வருவது இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் இருக்கும் வீடு மாமனார் பெயரில் உள்ளது. அதே சிவசுப்பிரமணியபுரத்தில் எனது கணவருக்கும் அவர் உடன் பிறந்தவர்களுக்கும் தனித்தனி வீடுகள் உள்ளது என்றால் சரிதான். வீடுகள் வரிசையாக உள்ளது என்றால் சரிதான். முதலில் 3ம் பின்னார் 2ம் மொத்தம் 5 வீடுகள் உள்ளது. அந்த வீடுகள் அவரது பெற்றோர்கள் கட்டி கொடுத்தது என்றால் சரியல்ல. எனக்கு எதிராக ஜானகியம்மாள் மற்றும் சுந்தரலிங்கம் செயல்படவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் பெயரில் பொய் வழக்கு தொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.08.07 14:30:38 +0530

Judicial Magistrate,
Valliyoor.